**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.248/2024 வா.சா.1 காணியப்பன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 18.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் என் சித்தப்பா காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி தாக்கல் செய்து உள்ளேன். வாதிகள் நாங்கள் அனைவரும் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு வாரிசு என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி 2ம் பிரதிவாதியிடம் நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். வாதிகளாகிய நாங்கள் 2ம் நிலை வாரிசுகளில் மூன்றாம் இடத்தில் இருக்கும் வாரிசுகள் என்பதால் எங்களுக்கு வாரிசு சான்று வழங்க 1 , 2 பிரதிவாதிகளுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

2) 3, 4 பிரதிவாதிகள் ஆகிய கண்ணம்மாள், திருமலைச்சாமி ஆகியோர் யார் என்றால் குப்பாண்ட கவுண்டர் மகள் நாச்சம்மாளின் குழந்தைகள் ஆவர். அவ்வாறு எனில் நாச்சம்மாள் என் அத்தை என்றால் சரிதான். என் தந்தை காணியப்ப கவுண்டர் என் சித்தப்பாக்கள் காளியப்ப கவுண்டர் , பழனி கவுண்டர் , பரமசிவம் மற்றும் என் அத்தை நாச்சம்மாள் ஆகியோர் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன் இறந்தனரா அல்லது பின் இறந்தனரா என்றால் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன்னரே மேற்படியோர் இறந்துவிட்டனர்.

3) நான் கூறும் கூற்றுப்படி பார்த்தால் 5ம் வாதி மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு வாரிசாக மாட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் என் சித்தப்பா காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி தாக்கல் செய்து உள்ளேன். வாதிகள் நாங்கள் அனைவரும் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு வாரிசு என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி 2ம் பிரதிவாதியிடம் நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். வாதிகளாகிய நாங்கள் 2ம் நிலை வாரிசுகளில் மூன்றாம் இடத்தில் இருக்கும் வாரிசுகள் என்பதால் எங்களுக்கு வாரிசு சான்று வழங்க 1 , 2 பிரதிவாதிகளுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

2) 3, 4 பிரதிவாதிகள் ஆகிய கண்ணம்மாள், திருமலைச்சாமி ஆகியோர் யார் என்றால் குப்பாண்ட கவுண்டர் மகள் நாச்சம்மாளின் குழந்தைகள் ஆவர். அவ்வாறு எனில் நாச்சம்மாள் என் அத்தை என்றால் சரிதான். என் தந்தை காணியப்ப கவுண்டர் என் சித்தப்பாக்கள் காளியப்ப கவுண்டர் , பழனி கவுண்டர் , பரமசிவம் மற்றும் என் அத்தை நாச்சம்மாள் ஆகியோர் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன் இறந்தனரா அல்லது பின் இறந்தனரா என்றால் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன்னரே மேற்படியோர் இறந்துவிட்டனர்.மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு வாதிகளுடன் சேர்த்து 3, 4 பிரதிவாதிகளும் வாரிசுகள் என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி